**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.399/2025 எச்.எம்.ஓ.பி.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 03-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | C.பரிமளாதேவி | வட்டம் | : | |
| த/பெ | : | | மாவட்டம் | : | |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.2 : முதல் விசாரணை**:-

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மொடக்குறிச்சி தாலுக்காவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்மந்தமான சொத்தை சென்று பார்த்தேன். சொத்தை வருவாய் ஆவணங்களை வைத்து தான் பார்வையிட்டேன். சொத்தின் ரீ.ச.எண்.183/1 அது 183/1L ஆக உட்பிரிவு செய்யப்பட்டது. அதன் பழைய எண்.547A, B ஆகும். பத்திரத்தில் பழைய க.ச.எண்.547B என்பதின் ரீ.ச.எண்.183/8 என தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதை சரிபார்த்து சான்று வழங்கியுள்ளேன் (வா.சா.ஆ.3). சொத்தின் அளவுகள் மற்றும் செக்குபந்திகள் சரியாக உள்ளது. நான் புலத்தனிக்கை செய்ததில் மேற்படி விபரம் தெரிய வந்தது.